[1981 மார்ச் 25

தானிப்பாடி கிராமத்திற்கு பாம்பன் ஆற்றிலிருந்து குடிநீர்

*வினா எண் 478—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டம், தானிப்பாடி கிராமத்திற்கு பாம்பன் ஆற்றிலிருந்து குடி நீர் கொண்டு வரும் திட்டத்தை நிறைவேற்று வது பற்றி அரசுக்கு ஏதேனும் விண்ணப்பங்கள் வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, நான் காலை 9.05-க்குத்தான் வந்தேன். உரிய நேரத்தில் வராத தற்காக வருந்துகிறேன்.

(அ) மற்றும் (ஆ) பாம்பன் ஆற்றிலிருந்து செங்கம் வட்டம் தானிப்பாடி கிராமத்திற்கு குடி நீர் கொண்டு வரும் சாத்தியக் கூறு உள்ளதா என்று தமிழ்நாடு குடி நீர் வடிகால் வாரியத்தால் ஆவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் வட்டம் தானிப்பாடி கிராமத்தில் பாம்பன் ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டத்தின்படி குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஆய்வு எந்தத் தேதியில் இருந்து மேற்கொள்ளப்பட்டது என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வு முடிந்தவுடன் மேற்படி ஆற்றில் இருந்து தண்ணீர் கொண்டு வர சாத்தியக்கூறுகள் திருப்திகரமாக இருந்தால், பிரிவு 6-ல் அடங்கியுள்ள சிற்றூர்களுக்குக் குடிநீர் வசதியளிக்கும் காலத்தில் இத்திட்டத்தை மேற்கொள்வது பற்றி பரிசீலனை செய்யப்படும். அல்லது இவ்வூராட்சி இத்திட்டத்துக்கு ஆகும் செலவுத் தொகையை செலுத்த முன்வந்தால் 'முன்வைப்புத் தொகை (டெப்பாசிட்) திட்டத்தின் கீழ் இத்திட்டத்தை செயலாக்கத் எற்கு எடுத்துக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் தின்று வாரியம் தெரிவித்துள்ளது.

திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவர் அவர்களே, தானிப்பாடி கிராமத்தில் இன்றைக்கும் கூட ஒரு குடம் தண்ணீர் 10 பைசாவுக்கு விற்கப்படுகிறது. இதனால் அந்த கிராம மக்கள் அவதிப்படுகிறார்கள். இந்த நிலையைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

[1981 மார்ச் 25]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தானிப்பாடி கிராமத்தில் ஒரு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், தரை மட்டத் தொட்டியும், நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. அது மட்டுமல்லாமல் ஆதி திராவிடர் காலனியிலுள்ள ஒரு துளைக் கிணறும் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. மேலும் 3 கிணறுகள் கட்டுவதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சியில் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம்

*வினா எண் 479—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சியில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு கடனாக அரசிடமோ அல்லது வேறு ஸ்தாபனத்திடமோ வாங்கிய தொகை எவ்வளவு ?

(ஆ) கடனைப் பரிசீலித்துத் தள்ளுபடி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சிக்கு காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு கடனாக ஆயுள் காப்பீட்டுக் கழகம் ரூ. 10.75 இலட்சமும், தமிழக அரசு ரூ. 0.247 லட்சமும் கொடுத்துள்ளன.

(ஆ) குடிநீர்த் திட்டத்திற்காக வழங்கப்பட்ட கடனாத லால் கடன் தள்ளுபடி செய்வதற்கில்லை.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சியின் வருமானத்தில் சரிபாதி பணம் இந்தக் கடனுக்காக வட்டியைச் செலுத்துவதற்கே சென்று விடுவதால் அசலைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. அதனால் அங்கே எந்தவிதமான அபிவிருத்தி வேலைகளும் செய்ய முடியாமல் தடைபட்டு இருக்கின்றன. ஆகவே அரசே இதனைப் பரிசீலித்து, அந்தக் கடனை திருப்பிச் செலுத்த வேண்டாம் என்று தள்ளுபடி செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, கடன் என்றால் அது திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய தொகை என்று பொருள். ஆகவே, கடனாகக் கொடுக்கப்பட்ட தொகையைத் திருப்பிச் செலுத்தியாக வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.